## இயல் - 3 உரைநடை விருந்து போற்றுதும்

1. **அறவுணர்வும் தமிழர் மரபும் பற்றி எழுதுக.**

**திருக்குறள்**:

- திருவள்ளுவர் இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே என்கிறார்.
- முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினரை வரவேற்க வேண்டும் என்பதை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்ற குறளில் எடுத்துரைக்கிறார்.

**சிலப்பதிகாரம்**:

- "...தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்று கண்ணகி வருந்துகிறாள்.

- கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலைக்காக வருந்துவதாகக் கூறுவதன் மூலம் விருந்தினரைப் பேணல் பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

**கம்பராமாயணம்**:

- கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கம்பர் கூறியுள்ளார்.

**கலிங்கத்துப்பரணி**:

- கலிங்கத்துப்பரணியிலும் செயங்கொண்டார் விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கியுள்ளார்.
  'விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
  மேன்மேலும் முகமலரும் மேலோர் போல"

2. **விருந்தோம்பல் குறித்து புறநானூறும், நற்றிணையும் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**புறநானூறு**: (தனித்து உண்ணாமை)

- தனித்து உண்ணாமை தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்.
- அத்தகையோரால் தான் உலகம் நிலைத்திருக்கிறது என்பதை,

  "உண்டால் அம்ம, இவ்வுலகம்
  இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும்,
  இனிதுஎனத் தமியர் உண்டலும் இலரே" என்று கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி குறிப்பிட்டுள்ளார்.

**நற்றிணை**: (அல்லில் ஆயினும்)

- விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளுள் ஒன்று. நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு. இதை,

  "அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்" என்று நற்றிணை குறிப்பிடுகிறது.

**3.விருந்தை எதிர்கொள்ளும் தன்மை பற்றி எழுதுக.**

**குறுந்தொகை**:

இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை.
"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ"
என்ற குறுந்தொகை அடிகள் புலப்படுத்துகின்றன.

**ஔவையார்**:

- "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்று கொன்றை வேந்தனிலும்,

- தனிப்பாடலில், "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் முரமுரெனவே புளித்த மோரும் - திறமுடனே" என்று கூறுவதிலிருந்து வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதை அறியமுடிகிறது.

**4. இன்மையிலும் விருந்தோம்பல் குறித்து எழுதுக.**

- வறிய நிலையான தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை குத்தியெடுத்து விருந்தினர்க்கு விருந்தளித்தாள் தலைவி. இதனை,

"குரல் உணங்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து ..........."

என்று புறநானூறு காட்சிப்படுத்துகிறது.

- நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்; இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு.
- இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியமில்லை; எனவே, அன்று விதைத்து விட்டு வந்த நெல்லை அரித்து வந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.
- நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை.

**5.விருந்தோம்பல் இன்றைய காலகட்டத்தில் எவ்வாறு மாறியுள்ளது?**

- காலமாற்றத்தில் விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது.
- விருந்து புரப்பது குறைந்ததால் சத்திரங்கள் பெருகின.
- தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினராக ஏற்றனர். உற்றார் உறவினரையும். நண்பர்களையும் விருந்தினராகக் கருதினர்.
- வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவது இல்லை.

- அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினராக ஏற்பதே இல்லை.
- அனைத்து சுபநிகழ்வுகளும் இல்ல விழாக்களும் திருமணக் கூடங்களுக்குப் புலம் பெயர்ந்து விட்டன.
- பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும் வரை 'திருமண ஏற்பாட்டாளர்' களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காண முடிகிறது.

**கூடுதல் வினாக்கள்**

**(எழுத வேண்டாம்) கண்டிப்பாக படித்துக் கொள்ள வேண்டும்.**

1. **பண்டைத் தமிழர்கள் எவ்வாறு விருந்தினரை வழியனுப்பினர்?**
   **விடை : பக்க எண் 51 தெரியுமா? பெட்டிச்செய்தி**
2. **வாழை இலையில் விருந்து குறித்து எழுதுக.**
   **விடை : பக்க எண் 52 தெரிந்து தெளிவோம்.**
3. **அமெரிக்காவின் மினசோட்டா வாழையிலை விருந்து விழா குறித்து எழுதுக.**
   **விடை : பக்க எண் 53 பெட்டிச்செய்தி**
4. **உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**
   **( சொந்தமாக எழுத வேண்டும்)**